செய்தி வெளியீடு எண்:628 நாள்: 30.12.2016

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைக் காத்திடவும் அவர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திடவும், தமிழக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பாக்ஜலசந்தி பகுதியில் மீனவர்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையில் மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவித்திடவும், அதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களிடம் 03.06.2014, 07.08.2015 மற்றும் 19.12.2016 ஆகிய தேதிகளில் அளித்திட்ட கோரிக்கையில் 1520 கோடி ரூபாய் சிறப்பு நிதியுதவியினை கோரினார்.

தமிழக அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணமாக இச்சிறப்பு நிதியில் கோரப்பட்டிருந்த உட்கட்டமைப்பு வசதிகளின் ஒரு பகுதியாக இராமேஸ்வரம் பகுதியில் பாக்ஜலசந்தியில் மீன்பிடி விசைப்படகுகளின் நெரிசலைக் குறைக்கவும், இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் மற்றும் அதன் அருகில் உள்ள கிராம மீனவர்கள் தங்களது மீன்பிடிப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி, மீன்பிடித் தொழிலினை மேற்கொள்ள ஏதுவாக மூக்கையூர் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக 113.90 கோடி ரூபாய்க்கான மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மத்திய அரசின் 50% நிதியுதவியுடன் கட்டப்பட உள்ள இந்த மீன்பிடித் துறைமுகத்தினை அலைத்தடுப்பு சுவர், படகு அணையும் தளம், தடுப்புச்சுவர், ஏலக்கூடம், மீன் உலர்தளம், வலைப்பின்னும் கூடம், குளிர்பதன நிலையம், எரிப்பொருள் நிலையம், படகு பழுதுப் பார்க்கும் வசதிகள், மீனவர் ஓய்வு அறை மற்றும் நிர்வாக கட்டிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய உலகத்தரத்துடன் உருவாக்கிட தேவையான எஞ்சிய 50% தொகையான 56.95 கோடி ரூபாயினை தமிழக அரசு தனது சொந்த நிதியை முதலீடு செய்ய உள்ளது.

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்பட உள்ள இந்த மீன்பிடி துறைமுகம் மூலம் இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் மற்றும் மூக்கையூர் மற்றும் அதனை சுற்றியுள்ள மீனவ கிராமங்களை சார்ந்த 250 விசைப்படகுகளையும், 200 நாட்டுப் படகுகளையும் மீனவர்கள் பாதுகாப்பாக நிறுத்தி மீன்பிடி தொழிலில் ஈடுபட முடியும் என்பதோடு, மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை சுகாதாரமாக கையாள்வதன் மூலம் அவற்றிக்கு ஏற்றுமதி சந்தையில் அதிக விலையினையும் பெற்று வாழ்வில் ஏற்றமடைவர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**